C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ

சிவமயம்

க்ரியா க்ரம த்யோதிகா

எனும்

ஸ்ரீமத் அகோர ஶிவாசார்ய பத்ததி

அந்த்யேஷ்டி விதி

ஸமய-விசேஷ-நிர்வாண-அந்த்யேஷ்டிகள்

துர்மரண-ப்ராயஶ்சித்தவிதி,

ஸம்க்ஷிப்த நிர்வாண அந்த்யேஷ்டி விதி

வெளியீடு

ஸ்ரீ ஶிவாம்ருத ஸங்கம்

திருப்புத்தூர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பூர்ணாஹுதியின் விளக்கம் :

ஹே ! அக்னியாகிய ருத்ரரே ! நீர் ஶக்தி வாய்ந்த காலன் என்ற அகோரராக விளங்குகிறீர்கள். அனைத்தையும் ஸம்ஹாரம் செய்யும் அகோரருத்ரராகிய நீர், ஶவம் சார்ந்ததான இந்த ஆஹுதியை ஏற்பீராக. இந்த ஶவ உடலானது, தீக்ஷை பெற்ற பின்பு ஒவ்வொரு நாளும் மந்த்ரங்களை உடலில் ந்யாஸம் செய்து கொள்ளுதல் போன்றவற்றால் மிகவும் புனிதமாகத் திகழ்கிறது. மேலும் தற்போது செய்யப்பட்ட அந்த்யேஷ்டி கர்மாவின் மந்த்ர ஸம்ஸ்காரங்களாலும் இவ்வுடல் தூய்மையாக்கப்பட்டதாகத் திகழ்கிறது (உணவு, மூலிகைகள் போன்றவற்றின் வாயிலாக மறுபடியும் உண்டுபண்ணத் தக்கதான). காலத்தால் இந்நிலையடைந்ததான, தூய்மையான இந்த ஶவ உடலையே ஆஹுதியாக ஏற்பீராக.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MoE

உ

சிவமயம்

க்ரியா க்ரம த்யோதிகா

எனும்

ஸ்ரீமத் அகோர ஶிவாசார்ய பத்ததி

அந்த்யேஷ்டி விதி

ஸமய-விசேஷ-நிர்வாண-அந்த்யேஷ்டிகள்

துர்மரண-ப்ராயஶ்சித்தவிதி,

ஸம்க்ஷிப்த நிர்வாண அந்த்யேஷ்டி விதி

வெளியீடு

ஸ்ரீ ஶிவாம்ருத ஸங்கம்

திருப்புத்தூர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MoE

உ

ஸ்ரீ கணேசாய நம:

க்ரியா க்ரம த்யோதிகா-வ்யாக்யா

ஸ்ரீமத் அகோர சிவாசார்ய பத்ததி:

அந்த்யேஷ்டி விதி:

ப்ரகாசநம்

ஸ்ரீ சிவாம்ருத ஸங்க:

ஸ்ரீ [illegible]

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சரமஶ்லோக:

காலே ஶைஶிர-ஹேமலம்பி-கலிதே மீநே ரவௌ உத்தரே
ஶுக்ரே க்ருஷ்ண-சதுர்தஶீ-ஶதபிஷக்-யுக்தே திவா கௌஶிக:।
ஸுப்ரஹ்மண்ய-[illegible] த்யக்த்வா-ஸா[illegible]கை:
ஸத்யோஜாதஶிவ: க்ருப: ஶிவஸமம் [illegible] ப்ராபைஷ [illegible]॥

கௌஶிக-கோத்ரத்தில் உதித்தவரும், ஸத்யோஜாத ஶிவ - என்ற தீக்ஷா நாமம் உடையவரும், உயர் நற்குணங்கள் கொண்டவரும், கருணை உள்ளங்கொண்டவருமான **ஸுப்ரஹ்மண்ய ஶர்மா** என்ற **முத்து குருக்கள்**, ஹேமலம்பிவர்ஷம், உத்தராயணம், ஶிஶிரருது, மீனமாஸம், க்ருஷ்ணபக்ஷம், சதுர்தஶீதிதி, வெள்ளிக்கிழமை, ஶதயநக்ஷத்ரம் ஆகிய காலங்களோடு கூடிய பகல்வேளையில் உடலைத் துறந்து, அந்த்யேஷ்டி-ஸபிண்டீகரணம் முதலிய ஸம்ஸ்காரங்களால் மும்மலக் கூட்டங்களையும் துறந்துவிட்டு, ஶிவபெருமானை ஒத்தாற்போன்ற நிலையை (நிழலை) எய்தினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

இந்நூல்

தருமை ஆதீனம் - திருக்கடவூர்,

அருள்மிகு ஸ்ரீஅமிர்தகடேஶ்வரஸ்வாமி தேவஸ்தான சிவாசார்யார்,

சிவஸாயுஜ்யஸ்ரீ 'கயிலை' T.N.முத்து குருக்கள்

அவர்களின் வருஷாப்திகத்தினை அனுஷ்டித்து

ஸ்வஸ்திஸ்ரீ விளம்பி ஷூ, பங்குனி மீ, 21 உ, 04.04.2019, வியாழக்கிழமை அன்று

மாதுஸ்ரீ. ராஜலக்ஷ்மி முத்துகுருக்கள் - திருக்கடவூர்,

சிவஸ்ரீ K.திருக்குமர சிவம், ஸௌ.திவ்யஸ்ரீ - கடப்பாக்கம்,

சிவஸ்ரீ K.ஸ்வாமிநாத சிவம், ஸௌ.சிவரஞ்ஜனி - கும்பகோணம்,

சிவஸ்ரீ G.வினோத் சிவம், ஸௌ.மதுவந்தி - சென்னை.

செல்வி M.யக்ஞசௌந்தர்யா

மற்றும் சலிப்பேரி குடும்பத்தினர்களால்

வெளியிடப்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நூல் விளக்கக் குறிப்பு

பெயர் - க்ரியா க்ரம த்யோதிகா எனும்
ஸ்ரீமத் அகோர ஶிவாசார்ய பத்ததி

பொருள் - அந்த்யேஷ்டி விதி (சைவ ஈமச் சடங்கு)

ஆசிரியர் - ஸ்ரீமத் அகோர ஶிவாசார்யார்
(ஶாலிவாஹன ஶகாப்தம்- 1080, கி.பி-1158)

தொகுப்பாசிரியர் &
விளக்கங்கள் - ப்ரஹ்மஸ்ரீ Dr.ஸே.அருணஸுந்தர குருக்கள்,
M.A., M.Phil., B.Ed., Ph.D சென்னை

உதவி - ஶிவஸ்ரீ G.கார்த்திகேய ஶிவம், திருப்பரங்குன்றம்.

உரிமை - தொகுப்பாசிரியர்

முதல் பதிப்பு - 2010

இரண்டாம் பதிப்பு - 04.04.2019

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

மொழி - ஸம்ஸ்க்ருதம், தமிழ்.

எழுத்து - க்ரந்தம், தமிழ்

எழுத்து அளவு - 12 புள்ளிகள்

தாள் - A-6 சைஸ்

பக்கங்கள் - xcvi & 213 (படங்கள் நீங்கலாக)

ப்ரதிகள் - 2000

விலை - ஶிவதர்ம-ப்ரசார-விலை ரூ 35.00

அச்சிடல் - ஹேமா க்ராபிக்ஸ், சிவகாசி

வெளியீடு - ஸ்ரீஶிவாம்ருத ஸங்கம், திருப்பத்தூர்

ப்ரதிகள் வேண்டுவோர் 94431 90783, 99447 23634 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளவும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

Bibliographical data

Name of the Book:	- Kriya-krama-dyotika @ Srimath Aghora Shivacharya Paddhati
Details of the Book	- Anthyeshti Vidhi (Shaivite Final Rites)
Author	- Shrimath Aghora Shivacharyar (Shalivahana Year -1080, AD.1158)
Editor & Tamil Explanations	- Dr.S.Arunasundara Gurukkal, M.A., M.Phil., B.Ed., Ph.D Chennai
Publisher	- Shivasri G. Karthikeya sivam, Thirupparankundram
Copyright©	- Editor
Language	- Sanskrit and Tamil

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

Script	- Grantham and Tamil
1st Edition	- 11.03.2010
2nd Edition	- 04.04.2019
Paper	- Maplito 80 GSM
Pages	- xcvi & 213
Price	- Rs. 35/-
Number of Copies	- 2000
Printer	- Hema Graphics, Sivakasi
Publication	- Sri Sivamruta Sangam, Thiruppathur

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ

ஸ்ரீகுருப்யோ நம:

பதிப்புரை

ஸம்ஸ்காரங்களின் வாயிலாக நமது உடலையும், உள்ளத்தையும் தூய்மைப்படுத்திக் கொண்டு, அதன் வாயிலாக சிறந்த நிலையை = மோக்ஷ நிலையை = சிவ ஸாயுஜ்யத்தை அடையக் கூடிய வழிகளை நமக்கு உபதேசிக்கக் கூடிய மதம் ஸநாதன மதம். உபதேசிக்கக் கூடிய நூல்கள் நமது வேதங்களும், சிவாகமங்களும்.

வேதங்களிலும், சிவாகமங்களிலும் சொல்லப்பட்ட பல்வேறு விதமான ஸம்ஸ்காரங்களுள் அந்த்யேஷ்டி என்பதும் மிகவும் முக்கியமானது. இறந்தவர் உயர்நிலையை அடையவேண்டும் என்ற ஒரு உயர்ந்த நோக்கத்தால், அவரைச் சார்ந்தவர்கள் செய்யக்கூடிய ஸம்ஸ்காரம் அந்த்யேஷ்டியாகும். அந்த சமயத்தில் இறந்தவரது உற்றார்கள் பெரும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

துயரத்தில் இருந்தாலும், அவர்களது சூழ்நிலையானது எந்த ஸம்ஸ்காரங்களையும் செய்ய இயலாத சூழ்நிலையாக இருந்தாலும் கூட, அவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு இறந்தவர் மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் இருவரது நன்மையைக் கருதி அந்த்யேஷ்டி போன்ற அந்திம ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்டே ஆகவேண்டும் என்பது நமது நூல்களின் கட்டளையோடு மட்டுமல்லாமல் நமது மரபும் அதுவே ஆகும்.

அவ்வகையில் நாம், குறிப்பாக குருக்களாகிய ஆதிசைவர்களாகிய சிவாசார்யப் பெருமக்கள், அந்த்யேஷ்டியைச் செய்துகொள்வதற்கு சௌகர்யமாக பனிரெண்டாம் நூற்றாண்டில் ஸ்ரீமத் அகோரசிவாசார்யார் அவர்களால் க்ரியா க்ரம த்யோதிகா என்ற பெயரில் எழுதப்பட்ட அகோர சிவாசார்ய பத்ததியின் ஒரு பகுதியாகிய அந்த்யேஷ்டியானது மறுவெளியீடாக ப்ரபா என்ற ஸம்ஸ்க்ருத உரையோடு கூட *2008*ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

அதன் பின்பு கையடக்கமாக அந்த பத்ததியில் உள்ள மூலவாக்யங்களை மட்டும் எடுத்துச் சுருக்கமான தமிழ் உரை வழிகாட்டுதலோடு *2010*ம் வருடம் வெளியிடப்பட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அதே நூலானது தற்போது சிற்சில திருத்தங்களுடன், சிந்தாதிரிப்பேட்டை கொ.ஷண்முகசுந்தர முதலியார் அவர்களால் கலி.5008ம் (1907-1908) ஆண்டு வெளியிடப்பட்ட நூலிலிருந்து சூர்ணோத்ஸவப் பகுதியும், சிற்சில திருத்தங்களோடு தற்போது வெளிடப்படுகிறது.

சூர்ணோத்ஸவத்திற்கான பொருளும், அதுபோல் ஸம்க்ஷிப்த நிர்வாண அந்த்யேஷ்டிக்கான பொருளும் சேர்த்து வெளியிடப்படுகிறது. ப்ரயோகத்திற்கு அவசியம் தேவை என்ற காரணத்தினால் நம் சிந்தனைக்கு எட்டிய நிலையில் இந்தத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

அறிஞர்கள் மற்றும் சான்றோர்கள் திருத்தப்பட்ட இந்தத் திருத்தங்களில் வேறேதும் பழையிருந்தால் அதையெல்லாம் அவரவர் வசமிருக்கக்கூடிய மூலப்ரதிகளோடு ஒப்பிட்டுத் திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். அத்திருத்தங்களை எங்களுக்கும் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம். மேலும் சில சில திருத்தங்கள் செய்யப்படலாம் என்று எங்களுக்குத் தோன்றினாலும் கூட கூடியவரை மூலங்களை அடியோடு திருத்தவேண்டாம் என்ற எண்ணத்தில் அத்தவறுகளையெல்லாம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

எங்களுக்குத் தவறு என்று பட்டவைகளையெல்லாம் கூட, ஒரு சில இடத்தில் அவ்வாறே விட்டுவிட்டுள்ளோம். இது குறுகியகாலத்தில் தக்கநேரத்தில் வெளியிடவேண்டி இருப்பதால் வாசகர்கள் இதைப் பொறுத்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நூல் திருக்கடவூர் சிவஸ்ரீ முத்து குருக்கள் அவர்களது வர்ஷாப்திகத்தில் வெளியிடவேண்டும் என்று அவர்களது குடும்பத்தார்கள் கேட்டுக்கொண்டபடி, சைவமக்களின் நலன்கருதி வெளியிடப்படுகிறது.

சிவபெருமானது திருவடியைச் சார்ந்த முத்து குருக்கள் அவர்கள் பல சிவாசார்யர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். தான் செய்யக்கூடிய பூஜைகள் போன்றவற்றில் பக்தியும் ச்ரத்தையும், சிவபெருமானிடத்தில் அளவற்ற அன்பும் உடையவராக இருந்தார். பெரியகோவிலில் ஏதோ பூஜை செய்தோம் என்றில்லாமல், கோவிலின் மரபுகளை ஆகமங்களின் மரபுகளைப் பின்பற்றவேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்டவர். யார் தவறு செய்தாலும் அதைச் சுட்டிக்காண்பிப்பதற்கு அவர் தயங்கியதில்லை. குறிப்பாக சுமார் 18 ஆண்டுகளுக்கு முன்பு தருமபுரம் மஹாஸன்னிதானம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அவர்களால் சுமார் 15ஆதீனங்களின் ஸன்னிதானங்களின் முன்னிலையில் ஏற்பாடு செய்யப்பட்ட மரபு அர்ச்சனை தொடர்பான கருத்தரங்கில் சிவஸ்ரீ முத்து குருக்களின் பங்களிப்பானது மிகவும் பாராட்டுதலுக்குரியது. மறக்க முடியாதது. அசாத்தியமான தைரியத்தோடு அவர் சபையில் பேசியதெல்லாம் இன்றும் நம் நினைவில் நிழலாடுகிறது. அந்த அளவிற்கு சமயப் பற்று உடையவர். அதே சமயத்தில் பலருக்கும் பொருளாதார ரீதியில் உதவி செய்தவர். நமது சங்கங்கள் தொடர்பான பல பெரிய நிகழ்வுகளெல்லாம் நடைபெறுவதற்கு நன்கொடைகளைத் தன்னந்தனியாக அளித்த ஒரு பேறு பெற்றவர்.

எப்போதும் சிவபெருமான் பேச வருவார் என்று நினைத்துக்கொண்டும், தன் குடும்பத்தார் உட்பட எல்லோரிடமும் அதைப் பேசிக்கொண்டும், தேவாரங்களைப் பற்றியும் ஆகம விஷயங்களைப் பற்றியும் அனவரதமும் பேசிக்கொண்டு இருக்கக்கூடிய பழக்கமுள்ளவர். பல தேவாரப் பாடல்கள் ஒலிப்பேழைகளாக வருவதற்கு நிறைய கொடைகளை அளித்தவர். பல நற்குணங்களைக் கொண்ட அவர் மிகச் சிறிய வயதிலேயே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

சிவபெருமான் திருவடி சேர்ந்தார் என்பது அனைவருக்கும் அதிர்ச்சியோடு மட்டுமல்லாமல், ஆழ்ந்த வருத்தத்தையும் அளிக்கக்கூடியதாகும். இருப்பினும் சிவபெருமானது ஆணையை மீற யாரால் இயலும்? அவரது ஆன்மாவானது நற்கதியை இந்த வர்ஷாப்திக சமயத்தில் சிவகதியை அடைய நாம் ப்ரார்த்திப்போமாக.

அவரது குடும்பத்தார்கள் சிவவித்யா தானமாகிய இந்த நூல் வெளியீட்டின் வாயிலாக சிறந்த பல சிவபுண்ணியங்களைப் பெற்று, அவர் வாழ்ந்திருந்தால் என்னென்ன நன்மைகளையெல்லாம் பெறுவார்களோ அந்த க்ஷேமங்கள் எல்லாவற்றையும் கடைசிவரை பெற்று, ஸ்ரீ அபிராமி அம்பிகா ஸமேத ஸ்ரீ அம்ருதகடேச்வரப் பெருமானது பரிபூர்ண அனுக்ரஹத்தை என்றென்றும் அடையவேண்டும் என்று நாம் ப்ரார்த்திப்போமாக.

S. அருணஸுந்தரம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

உ

சிவமயம்

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் 2010ம் ஆண்டு வெளியிடப்பட்ட அந்த்யேஷ்டி விதியின் இரண்டாம் பதிப்பு தற்போது (2019) பல புதிய அம்சங்களுடன் வெளிவருகிறது.

இந்நூலை மறுபதிப்பு செய்யவேண்டும், அந்த்யேஷ்டி செய்து வைக்கும் ஆசார்ய-ஸாதகர்களுக்கு உதவும் வண்ணம் பல புதிய அம்சங்களுடன் வெளிவரவேண்டும் என்று விரும்ப அதற்கான பணிகளைச் செய்யுமாறு வேண்டியவர் கடப்பாக்கம், வியாகரண சிரோமணி சிவஸ்ரீ திருக்குமரன் சிவம் அவர்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அவரது மாமனார் திருக்கடையூர் சிவஸ்ரீ T.N. முத்து ஸுப்ரஹ்மண்ய குருக்கள் அவர்களது ச்ரத்தாஞ்ஜலியில் இந்நூல் வெளிவருகிறது. தன்னுடைய பல்வேறு அலுவல்களுக்கு இடையில், உடல் நிலை சரியில்லாத போதும் அதைப் பொருட்படுத்தாமல், நூல் சரியாகப் பயன்படவேண்டும் என்ற நோக்கில் பொருட்பட்டியலில் பொருட்களின் அளவு, அவை எங்கு உபயோகம் என்ற விஷயங்களையும், புதிதாக சூர்ணோத்ஸவ விதியை விளக்கங்களுடன் சேர்த்து எழுதியும், அந்த்யேஷ்டிச் சுருக்கம் முழுவதையும் தமிழ்படுத்தியும், நூல் முழுவதையும் பார்த்துப் பிழை திருத்தங்கள் செய்தும் வழங்கியவர், மயிலை ஸம்ஸ்க்ருதக் கல்லூரியின் வியாகரணத்துறைத் தலைவர், வியாகரண சிரோமணி ப்ரஹ்மஸ்ரீ ஸே. அருணஸுந்தர குருக்கள் அவர்கள். சைவ உலகம் அவர்களுக்கு என்றும் நன்றிக் கடப்பாடுடையது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

இரண்டாம் பதிப்பின் நூலாக்கப்பணியில் பெரிதும் உதவிய 'சிவாகம பாஸ்கர' ஈரோடு பு. அரவிந்த சிவம், 'சிவாகம பண்டித ப்ரவர' கோயிலடி ஸ்ரீ சபரிகிரீச சிவம், 'சிவாகம பண்டித ப்ரவர' செங்கல்பட்டு ஸ்ரீசுரேஷ் சிவம், 'சிவாகம பாஸ்கர' பெரியகோட்டை வெ. தினேஷ் சிவம், 'சிவாகம வித்யாநிதி' பண்ருட்டி ஸ்ரீஅரவிந்தசிவம் ஆகியோருக்கும், நூலினை நல்லமுறையில் அச்சிட்டுத்தந்த சிவகாசி ஹேமா க்ராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் நமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேரன்புடன்

சிவசரணகமலைக ஶரண்யன்

சிவஸ்ரீ க. கார்த்திகேய சிவம்

ஆலோசகர், ஸ்ரீசிவாம்ருத ஸங்கம்

ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம்,

திருப்பரங்குன்றம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

தருமை ஆதீனம், திருக்கடவூர்

ஸ்ரீஅபிராமி அம்பிகா ஸமேத ஸ்ரீ அம்ருதகடேச்வர

தேவஸ்தான சிவாசார்யார்

கயிலை சிவஸ்ரீ T.N முத்து குருக்கள் அவர்களின் வாழ்க்கை

வரலாற்றுச்சுருக்கம்

அறிமுகவுரை

'கயிலை' சிவஸ்ரீ T.N முத்துகுருக்கள் என்று அனைவராலும் அழைக்கப்பெற்ற T.N முத்துசுப்பிரமண்யம் என்கிற ஸத்யோஜாத சிவம், திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டம், சலிப்பேரி என்ற கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட, M. ராமநாதகுருக்கள் - வேதாம்பாள் தம்பதியருக்கு பௌத்ரனாக, R. நடராஜகுருக்கள் - சாரதாம்பாள் தம்பதியருக்கு ஸீமந்த புத்திரனாக, சோபக்ருது வருடம் *12.11.1963* ஐப்பசி மாதம் ஹஸ்த நக்ஷத்திரத்தில், மணிக்கிராமம் என்னும் ஊரில் பிறந்தார். ஜனித்த மாதம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அடைமழைக்காலம் என்பதால் தனது பாட்டியால் கங்காதரன் என்ற பெயராலும் அழைக்கப்பட்டார்.

தனது மழலைப் பருவம் முதல் பள்ளி பருவம் வரை தனது சொந்த ஊரான பரங்கிப்பேட்டையில் வசித்தார். சிறுவயது முதல் ஓவியம், கவிதை, கட்டுரைகள் எழுதுவதில் மிகுந்த கலையார்வம் கொண்டு இருந்தார்.

பின்பு தருமை ஆதீன வேதசிவாகம பாடசாலையில் 1979 முதல் 1984 வரை வேதசிவாகமக் கல்வியை முறையாகக் கற்று 'சிவாகம ப்ரவீணர்' என்ற பட்டத்தினை பெற்றார். தருமபுரம் பாடசாலையில் பயின்றகாலம் முதலே 'தருமை ஆதீனம் 26-ஆவது குருமஹாஸன்னிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்' அவர்களிடம் அபரிமித அன்பனில் இருந்தார். ஆகையால் குருமஹாஸன்னிதானம் அவர்கள் கேட்கும் பல ஆகமவினாக்களுக்கு, பலநூல்களை ஆராய்ந்து பதில் அளிப்பார். இதிலுள்ள நிறைகுறைகளை ஸன்னிதானம் அவர்கள் சுட்டிக்காட்டுவார். ஆகையால் தனது ஆகம-சைவசித்தாந்த அறிவு வளர்ச்சிக்கு சன்னிதானம் அவர்களே காரணம் என்று அனுதினமும் கூறுவார். மேலும் தனது தந்தையாரின் வழிகாட்டலிலும், திருச்சி,

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

கண்ணன் குருக்களின் பயிற்சியினாலும் உற்சவ அலங்காரம், சந்தனகாப்பு அலங்காரம் முதலியனவற்றிலும் சிறந்து விளங்கினார்.

பின் திருக்கடவூரில் தனது அத்தை, ஜானகி கந்தசாமிகுருக்கள் அவர்கள் இல்லத்தில் சிறிதுகாலம் தங்கி இருந்தார். பின் இவ்வூர் ஸ்ரீ அபிராமி அம்பிகா சமேத ஸ்ரீஅமிர்தகடேச்வர ஸ்வாமி தேவஸ்தான சிவாசார்யார்களுள் ஒருவரான வடக்கு மடவிளாகம், T.V.ம்ருத்யுஞ்ஜய குருக்கள் - சிவகாமி தம்பதியாரின் கடைசி மகளான ராஜலக்ஷ்மியை, ப்ரபவ வருடம், வைகாசி மாதம், 20ம் தேதி *(03.06.1987)*, அன்று பெரியோர்கள் ஆசியுடன் மணம் முடிந்தார்.

முத்துகுருக்கள் ராஜலக்ஷ்மி தம்பதியரின் இல்லறமாகிய நல்லறத்தின் பயனாக திவ்யஸ்ரீ, சிவரஞ்சனி, மதுவந்தி, யக்ஞசௌந்தர்யா, என்ற நான்கு பெண்பிள்ளைகள் பிறந்தனர். அனைவருக்கும் கல்விச் செல்வத்தினை அளித்தும், நல்லமுறையில் வளர்த்தும் தான் வாழ்ந்த காலத்திலேயே முதல் மூன்று பெண்களுக்கு திருமணமும் செய்து வைத்து நல்ல பெற்றோருக்கு எடுத்துக்காட்டாய் திகழ்ந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

பூஜைமுறை:

தனது மாமனார், T.V ம்ருத்யுஞ்ஜய சிவாசார்யாரின் வயோதிகம் காரணமாகவும், உடல்நலக் குறைவினாலும் தனது கோவில் பூஜைமுறையில் உதவி புரியும் பொருட்டு, தருமை ஆதீனம் 26-வது குருமஹா-சன்னிதானத்தின் பரிபூரண அனுமதியை பெற்று, முத்துகுருக்கள் ராஜலக்ஷ்மி தம்பதியருக்கு, ப்ரபவ வருடம், 1987 ஆண்டு, கார்த்திகை மாதம் சிவதீக்ஷா ஆசார்யாபிஷேகம் நடத்திவைத்தார். அன்று முதல் தனது மாமனார் வழிகாட்டலுடனும், வேதசிவாகம நெறியுடனும் ஸ்ரீஅபிராமி அம்பிகா சமேத ஸ்ரீஅமிர்தகடேச்வர ஸ்வாமியை திருமேனிதீண்டி வழிபடும் பாக்கியம் பெற்றார். இதனை அவர் பிறவிப் பயனை அடைந்த பாக்கியமாகவே கருதினார்.

மார்கழி வ்யதீபாத காலஸம்ஹாரமூர்த்தி அபிஷேகம்:

எதையும் ஆராய்ந்து அறியும் ஆற்றலுடையவர் சிவஸ்ரீ முத்துகுருக்கள் அவர்கள். அதன் சான்றாக திருக்கடவூர், சித்திரைத் திருவிழாவில், காலஸம்ஹாரமூர்த்தி, யமனை ஸம்ஹாரம் செய்து

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

மார்கண்டேயருக்கு சிரஞ்சீவித் தன்மை அருளிய லீலை, ஆறாம் திருநாளன்று வழக்கில் இருந்து வருகிறது. முற்காலத்தில் மார்கழிமாதம், 27 யோகங்களுள் ஒன்றான 'வ்யதீபாத யோகம்' அன்று இந்நிகழ்ச்சி நடந்தது என்பதை அறிந்து, அதற்கான ஆவணங்களையும் கண்டறிந்தார். அதனை ஸன்னிதானத்திடம் எடுத்துக்கூறி, அவரின் அனுமதியுடன் அந்நாளில் காலஸம்ஹாரமூர்த்தி சுவாமிக்கு தன் கைங்கர்யத்தில் அபிஷேக வழிபாட்டினைச் செய்து வந்தார். தனக்குப் பிறகும் இம் மார்கழி வ்யதீபாத காலஸம்ஹாரமூர்த்தி அபிஷேகம் விடுபடாமல் இருக்க வேண்டும் எனக் கருதி, தன் கைப்படவே, தன் நான்கு பெண்களும் மாப்பிள்ளைகளும் செய்ய வேண்டும் என எழுதிவைத்துள்ளார்.

சாந்திக்ரியா விபூஷணம்:

திருக்கடவூர் ஆலயத்தில் நடைபெறும் ஆயுஷ்யஹோமம், அறுபதாம் கல்யாணம், சதாபிஷேகம் முதலிய வைபவங்கள் ஆயிரத்திற்கும் மேல் செய்துவைத்துள்ளார். அதன்மூலம் பல அன்பர்கள், நண்பர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள் முதலியவர்களுடன் அறிமுகமானார். இவர் இந்நிகழ்ச்சியில் வேதசிவாகம, புராண, சாத்திர திருமுறை, ஸ்தலபுராணம் முதலிய ஆதாரங்களுடன், ஆயுஷ்ய ஹோமம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MoE

அறுபதாம் கல்யாணம் முதலியவற்றில் பூஜிக்கப்படும் தேவதைகள், அதன் தன்மைகள், கதைகள் என மக்களுக்குச் சொல்லியும், பல கருத்தரங்குகளில் கலந்து கொண்டும், வந்தவர்களை சிவானுபூதியில் திளைக்கச் செய்வார். குழந்தைகளுக்கு எப்போதும் இறையுணர்வைத் தூண்டுகிற கதைகள் கூறி ஆழப்பதியச்செய்வார். இவ்வாறு சிவசிந்தனைகள் கொண்ட இவர் சிவாகம சாந்திக்ரியா விபூஷண, கயிலைசிவமணி, சிவாகம வாசஸ்பதி, கயிலைச்செல்வர், ஆதிசைவ முக்தாமணி என பல பட்டங்களைப் பெற்றுள்ளார்.

ஸமுதாய சிந்தனை:

தன் ஸமுதாயமாகிய ஆதிசைவ ஸமூஹம் என்றும் சிவகைங்கர்யத்தில் இருக்கவேண்டும் என்று நித்தம் இறைவனிடம் வேண்டியவர். என்றும் சிவாச்சார்யர்கள் மீது அன்பும் மரியாதையும் கொண்டவர். அதுமட்டுமின்றி அனைத்து மக்கள் மீதும் அன்புகொண்டவர். ஆகையால் முறைசாரா வழிபாட்டுமுறை (திருமுறை வேள்வி முதலியன) உலகிற்கு நன்மை பயக்காது, நாட்டிற்கும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ராஜ்ஜியத்திற்கும், நாட்டுமக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் என, தான் கற்ற வேத-சிவாகமத்-திருமுறைகளில் ப்ரமாணங்களைத் திரட்டி, தருமபுரம் ஆதீனம் 26வது ஸன்னிதானம் அவர்களிடம் அளித்தார். பின் குருமஹா-ஸன்னிதானம் அவர்களது தலைமையில், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனமும், தமிழ்நாடு அர்ச்சகர்களின் ஆகமவல்லுனர் குழுவுடனும் இணைந்து, சித்ரபானு வருடம், ஐப்பசி மாதம் 4,5 ஆம் நாட்களாகிய, 21.10.2002 மற்றும் 22.10.2002 திங்கள், செவ்வாய்க்கிழமை இரு நாட்களிலும், தருமை ஆதீனக் கலைக்கல்லூரி வளாகத்திலுள்ள ஸ்ரீ சிவஞானநிலையத்தில் கருத்தரங்கம் நடத்தி, அதன் வாயிலாக 'சிவாகமப்படியே' பரார்த்தாலய நித்ய-நைமித்திக-காம்ய பூஜைகள், கும்பாபிஷேகங்கள் முதலியன செய்யவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இக்கருத்தரங்கில், பல மடாதிபதிகள், ஜீயர்கள், சிவாசார்யார்கள், பட்டாசார்யார்கள், 'முறைசாரா வழிபாட்டு முறையை' ஆதரிக்கும் ஆர்வலர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியர் ஆகப் பெறின்' என்ற குறளிற்கிணங்க, கருத்தரங்கின்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

ஒருங்கிணைப்பாளர்களுள் ஒருவராக இருந்து தான் எண்ணிய தீர்மானம் நிறைவேறுவதற்கு அயராது பாடுபட்டார். அதே சமயத்தில் சைவத்திருமுறைகள் மேல் கொண்ட பற்றினால் திருக்கடவூரில் ஸ்ரீ ஆலாலசுந்தரர் மன்றத்தின் தலைவராகவும் பணியாற்றி தமிழ்த்தொண்டாற்றினார்.

திருக்கயிலாய தரிசனம்

திருக்கயிலாய பரம்பரை தருமையாதீனத்துக்குரிய திருக்கோயிலில் பணியாற்றியதின் பயனாக, திருக்கயிலாயம் சென்று அதிருத்ரயாகத்தில் பங்குபெற்றும், காசிக்ஷேத்திரத்தில் தம்பதிகளாக ஸ்ரீ விச்வநாதரைத் தரிசித்து, அங்கு நடைபெற்ற அதிருத்ரயாகத்திலும் பங்குபெறும் பாக்கியத்தினைப் பெற்றார். நேரம் கிடைக்கும்போதெல்லாம் சிவக்ஷேத்திரங்கள் விஷ்ணு க்ஷேத்திரங்கள், சென்று தரிப்பதை வழக்கமாகக் கொண்டார்.

திருக்கோவில்களின் திருப்பணி செய்வதற்கு வாரி வழங்குவதில் வல்லவர். தன் வருமானத்தில் ஒரு பகுதியை ஸ்வாமி கைங்கர்யத்திற்கு என்றே முதலில் எடுத்துவைப்பார். அந்தந்த ஊரில் உள்ள

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

சிறப்புக்களையும், தேவாரப் பாடல்களையும் கல்வெட்டில் பதிக்க வேண்டும்; மதில் சுவர்களில் சிவச்சின்னங்கள், சிவச்சிந்தனைகள் இடம்பெற வேண்டும் என்பது போன்ற விஷயங்களுக்கு திருப்பணி சமயத்தில் முக்கியத்துவம் கொடுப்பார். எடுத்துவைத்த செல்வத்தினை சிவாசார்யாரிடமோ, ஸ்தபதியிடமோ, ஊர் பெருந்தகைகளிடமோ கொடுத்துக் கோயில் திருப்பணிகள், கும்பாபிஷேகங்கள், உற்சவங்கள் முதலிய பல கைங்கர்யங்களை பலனை எதிர்பாராது செய்தார். வேதசிவாகம பாடசாலை மற்றும் திருமுறை பாடசாலைக்கும், மாணவர்களுக்கும், பொதுக்கல்வி பயிலும் மாணவர்களுக்கும் தன்னால் முடிந்த அளவு உதவிகள் புரிந்தார்.

என்றும் தான் இறைப்பணியிலேயே இருப்பதை தலையாயக் கடமையாகக் கொண்டு செயலாற்றிய இவர், ஹேவிளம்பி வருடம், கார்த்திகை மாதம், 2018 ஆண்டு அன்று தன்னுடைய உடல் நலம் பாதிப்படைவதாக உணர்ந்ததும், தன் மாமனார் எழுதிவைத்ததின் படி, தனக்குப்பின், தன் திருக்கோயில் பூஜைமுறையை T.V.ம்ருத்யுஞ்ஜய குருக்களின் அபிமான புத்ரரான M.K.கணேச குருக்கள் அவர்களுக்கு, குருமஹா-ஸன்னிதானம் அவர்களின் அனுமதியுடன், அஸ்த்ராபிஷேகம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

செய்துவைத்து, மனமுவந்து அளித்தார். இதன் மூலம் நல்ல பொறுப்பாளராகவும் திகழ்ந்தார்.

தன் உடல்நலத்தைப் பொருட்படுத்தாமல் பூஜை முறை காலங்களில் திருக்கோயில் மணி சப்தம் கேட்ட பிறகு தான் உணவு உட்கொள்வார். தனது நீண்டகால விருப்பத்தின் காரணமாக 'வில்வாரண்யம்' என்ற பெயருக்கிணங்க எண்ணிலடங்கா வில்வ மரங்களை ஆலய நந்தவனத்தில் வைத்தார். ஸ்தல வ்ருக்ஷம் பட்டுப் போனதைக்கண்டு மனம் வேதனைப் பட்டு, இவரது கடைசித் தொண்டாக சண்டேசர் ஆலயம் அருகில் ஸ்தலவ்ருக்ஷமாகிய பஞ்சிலம் கொடியை நிறுவ ஏற்பாட்டினை செய்தார்.

இவ்வாறு குணநலன்கள் பல பொருந்தியவரின் தந்தையார், R.நடராஜ குருக்கள் சிவபதம் அடைந்த போது அவரது இறுதிச் சடங்குகளை உடல்நலம் குன்றியபோதும் ச்ரத்தையுடன் செய்தார். ஒருவர் தன் வாழ்நாளில் 'தேவ, மனுஷ்ய, பித்ரு' கடன்களின்றி வாழ்ந்தார் என்பதற்கு இவரது வாழ்க்கையே சான்றாக அமைந்துள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

'சித்தத்தை சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்' என்ற வாக்கிணங்க, முத்து குருக்கள் அவர்கள், பங்குனி மாதம் 1ம் நாள் தன் சிந்தனை முழுவதையும் சிவபூஜையின் மேலேயே வைத்தார். நீண்ட பூஜையாக செய்து கொண்டே இருந்தார். நான் பூசலார் நாயனார் போல மனக்கோயில் கட்டி, அதிலும் சிவனை பூஜித்து கட்டம் கட்டமாகச் சென்று கொண்டு இருக்கிறேன், என்னை யாரும் தொந்தரவு செய்யாதீர்கள் என்று பேசத் தொடங்கினார். தன் இறுதி மூச்சு வரை அபிராமி அபிராமி என்று அன்னையின் பெயரை உச்சரித்து, கண்ணிமைக்கும் நேரத்திற்குள் தன்பூத உடலை விட்டு பங்குனி மாதம் 2ம் தேதி, *(16.03.2018)* க்ருஷ்ணபக்ஷம் சதுர்தசி திதியில் சிவஸாயுஜ்யம் அடைந்தார்.

'பேசவருவார் ஒருவர் அவர் எம்பெருமான் அடிகளே' எனப் பேசியவர், தன் பேச்சினால் அனைவரின் மனங்களையும் கவர்ந்தவர், இனி நம்மிடம் பேசமாட்டார். எனினும் அவரது இனிய நினைவுகளும், எண்ணங்களும் நம்மோடு என்றும் பேசிக்கொண்டே இருக்கும்.

- முத்துகுருக்கள் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களைத் தந்தவர் அவரது மனைவியார் திருமதி ராஜலக்ஷ்மீ முத்து குருக்கள் அவர்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ

ஶிவமயம்

ஶிவாகம ஞானபானு, ஸாஹித்ய ஶிரோமணி,

Dr. சிவஸ்ரீ. பால.ஸர்வேச்வர குருக்கள்,

குருமுதல்வர்,

நிறுவனர்-ஸ்ரீமத் ஸ்ரீகண்ட சிவாசார்ய வேதசிவாகம வித்யாபீடம்,

ஸம்ஸ்க்ருத விகாஸ கேந்திரம்,

ஸ்ரீமத் ஸ்ரீகண்ட சிவாசார்ய சோத ப்ரதிஷ்டானம், காரைக்கால்.

"பேசவருவார், ஒருவர் அவர் எம்பெருமான் அடிகளே" - என்ற திருமுறை வரிகளோடு அவர் இனிமேல் பேசுவாரா? என்று ஆவலோடு காத்திருக்கிறேன். அதேசமயம் முத்துக்கு முத்தாக சொத்துக்கு சொத்தாக நமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய சிவஸ்ரீ முத்து குருக்கள் என்கிற முத்து ஸுப்ரஹ்மண்ய சிவாசார்யர் அவர்கள் சிவஸாயுஜ்யம் அடைந்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் நான். ஆனால் அவருடைய ஸ்தூல தேஹத்தை

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

இனி காணமுடியாது; அவரோடு நேரிடையாக பேசமுடியாது என நினைக்கும் போது எனக்கு உண்மையிலேயே பேசவரவில்லை. இருந்தாலும் அவருடன் கடந்த 1997ல் இருந்து பழகிய நாட்களை, பேசிய நாட்களை ஆகமக் கருத்துக்களை பரிமாறிக் கொண்ட நாட்களை நினைத்துப் பார்க்கும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. மலரும் நினைவுகளாக இருக்கிறது.

அவர் ஒரு சிவாசார்ய குலக் கொழுந்து, சைவசித்தாந்தத்தில் திளைத்தவர். தமிழின்பால் மிகுந்தப் பற்று கொண்டவர். தேவாரத் திருமுறைகளில் மிகுந்தப்பற்று கொண்டவர். வேதசிவாகமங்களில் மிகுந்தப் பற்று கொண்டவர். சைவசித்தாந்தத்தில் ஆழ்ந்த ஞானம் கொண்டவர். ஆலயவழிபாட்டு முறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ஆத்மார்த்த - பரார்த்தபூஜைகளில் தன்னை உண்மையாகவே அர்ப்பணித்துக் கொண்டவர்.

ஆட்சியாளர்கள் மூலமாக நம்முடைய ஆலயவழிபாடு மொழிவாரியாகவோ இனவாரியாவோ ஒரு எதிர்மறை நிகழ்வு ஏற்படும் சமயத்திலெல்லாம் அதுசம்பந்தமாக சைவாகம வழிநிற்கும் வல்லுனர்களுடன் கலந்தாலோசித்து நம்முடைய ஆலயவழிபாட்டு முறைகள் கெட்டுவிடா வண்ணம் காத்து நின்றவர். முறைசாரா வழிபாட்டை அரசாங்கம் செய்விக்க உத்தரவிட்ட சமயத்தில், நம்முடைய தருமையாதீனம் குருமகாசன்னிதானம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அவர்களிடம் அது விஷயமாக எடுத்துரைத்து, ஏனைய மடாதிபதிகளையும், சிவாசார்ய பெருந்தகைகளையும் எதிர்மறையாக உள்ள தமிழ் ஆர்வலர் என்ற போர்வையிலே இருந்த சைவசமய எதிரிகளையும் ஒன்று திரட்டி, நம்முடைய வழிபாட்டு முறையை நிலைநிறுத்தியவர்.

அநேக ஆலயங்களுக்கு திருப்பணி செய்தவர். பொருளீட்டுவது மட்டுமல்லாது தான் ஈட்டிய பொருளைக் கொண்டு ஏனைய கோயில்களுக்கு கும்பாபிஷேகம், ப்ரதிஷ்டை முதலியவைகளைச் செய்தவர். பலநூல்களை பேணிக்காத்தவர்; பல நூல்களைக் கற்று அறிந்தவர். சைவசமயத்திற்கு மட்டுமல்லாமல் பாமர மக்களுக்கும் பலவிதத்திலும் பொருளுதவியும், தன்னுடைய சமயம் சார்ந்த நெறியில் நின்றும் தொண்டாற்றியவர். அவர்,

அவர் மறுபடியும் பிறக்கக்கூடாது என்று தான் பேசுவார்; எனக்கும் அதே ஆசைதான். கர்ம வினையினாலே நாம் மறுபடி பிறப்போமே என்று நினைப்போம்; ஆனால் அவருக்கு மறுபிறப்பு கிடையாது. ஸ்வாமிக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்துவிட்டார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

இஷ்டியிலே மிகச்சிறந்த இஷ்டியாக அந்த்யேஷ்டி சைவாகமத்தில் கூறப்பட்டுள்ளது. ஆன்மாவை பரதத்துவத்திலே சேர்ப்பிப்பதற்காகச் செய்யக்கூடிய அந்தியேஷ்டியை அவருக்கு அடியேன் செய்விக்க இறைவன் கூட்டிவைத்தார். ஒருபுறம் சந்தோஷம்; மறுபுறம் மனக்லேசம்; இரண்டிற்கும் நடுவிலே என்னுடைய திண்டாட்டம். அந்த அந்தியேஷ்டியில் ஆசார்யக்ருத்யம் நான், ஸாதகக்ருத்யம் என் நண்பர் திருமயிலை ப்ரஹ்மஸ்ரீ. ஸே. அருணஸுந்தர குருக்கள் அவர்கள். அவருக்கும் நண்பராகவே விளங்கினார் முத்து குருக்கள். ஆகவே எங்கள் மூன்று பேருக்கும் ஒரு முக்கோணக் காதல். அந்தக் காதல் இறைத்தன்மையான காதல்.

"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே."

அந்த ஐந்தெழுத்து மந்திரஸ்வரூபமாக இருக்கும் பரமேச்வரரின் திருவடியிலே அவர் ஸாயுஜ்யமடைந்ததை நான் மிகவும் ஸந்தோஷமாக நினைக்கின்றேன். சிவோஹம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

உ

சிவமயம்

முதற்பதிப்பின் முன்னுரை

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாம் தாம் ஆரே
வந்தவாறு எங்ஙனே போமாறு ஏதோ
மாயமாம் இதற்கேதும் மகிழவேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக்கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய என்று
எழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே!

-ஸ்ரீமத்- திருநாவுக்கரசர் பெருமான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அந்த்யேஷ்டி ஸம்ஸ்காரம்

தபோவனம் வா தடம் வா ஸரித்ஸமுத்ர-ஸேவிதம்।
விஹாய யோகமார்கேண கலேவரம் விஹீயதே॥
-ஸ்ரீஶுக வாக்யாம்ருத:

பண்பாட்டின் தலைநகராக விளங்கும் பாரதமணித் திருநாட்டில், மனித வாழ்வின் ஒவ்வொருகட்டமும் இறைவனுடன் தொடர்புபடுத்தப்பட்டே இருக்கிறது.

பிறப்பிற்குக் காரணமான கர்பாதானம் முதல் ஶரீரத்தின் மறைவுக்குப் பின்னர் செய்யப்படுவதான அந்த்யேஷ்டி வரையிலான அனைத்து ஸம்ஸ்காரங்களும் இறைவனை முன்னிலைப்படுத்தப்பட்டே நடத்தப்படுகிறது.

இறைவன் முன்னிலை அல்லாத ஒரு நிகழ்வு இல்லவே இல்லை. மணிவாசகப் பெருமானின் "போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே" என்ற வாக்கு இதைத் தெளிவுபடுத்துகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

வாழ்வின் முதல் பொருளாக மட்டுமின்றி வாழ்வின் குறிக்கோளாகவும் அவ்விறைவனே விளங்குகின்றான். கர்பாதானம் முதல் செய்யப்படுகின்ற ஸம்ஸ்காரங்கள் யாவும், ஸம்ஸ்கரிக்கப்படும் அவ்வுயிரை உயர்ந்த ஒரு நிலைக்கு அழைத்துச் செல்லும் வண்ணமாகவே அமைந்துள்ளது.

ஸம்ஸ்காரம் என்ற சொல் அதன் பொருளை உணர்த்துவதாக அமைந்துள்ளது. எந்த ஒரு க்ரியையினால், ஒரு பொருளுக்கு ஒரு நிலையை அடையும் சிறப்புத் தகுதி ஏற்படுகிறதோ அந்த க்ரியைக்கு ஸம்ஸ்காரம் என்று பெயர்.

"𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍋 𑌨𑌾𑌮 𑌸𑌃 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌜𑌾𑌤𑍇 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑌦𑌾𑌰𑍍𑌥𑌃 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌅𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑍍𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌸𑌃" அதாவது பசு எனப்படும் உயிரானது பரம்பொருள் எனப்படும் இறைவனை அடைவதற்கான தகுதியை வழங்கவல்லது ஸம்ஸ்காரம் ஆகும் எனப் பொருள் வழங்குவர் பெரியோர்.

இறைவனை அடைவதற்கான தகுதியை அளிக்கின்றன அந்த ஸம்ஸ்காரங்கள் என்பதால் அத்தகுதியைப் பெறுவதற்கு எதிராக

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

இருக்கும் தோஷங்களையும் அவை நீக்குகின்றன என்பதும் பெறப்படும்.

வைதிக ஸம்ஸ்காரங்கள் ஆத்மகுண அபிவ்யக்தி மற்றும் ப்ரஹ்ம-ப்ராப்தியையும், ஶைவிக ஸம்ஸ்காரங்கள் ஶிவத்வ வ்யக்தியையும் ஏற்படுத்துபவைகளாக விளங்குகின்றன என்பதை கீழ்க்காணும் வாக்யங்கள் விளக்குகின்றன.

𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌵𑍍𑌰𑌤𑍈𑌃 𑌹𑍋𑌮𑍈𑌃
𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌦𑍍𑌯𑍇𑌨 𑌇𑌜𑍍𑌯𑌯𑌾 𑌸𑍁𑌤𑍈𑌃।
𑌮𑌹𑌾𑌯𑌜𑍍𑌞𑍈𑌶𑍍𑌚 𑌯𑌜𑍍𑌞𑍈𑌶𑍍𑌚 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀𑌯𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌤𑌨𑍁𑌃॥

--𑌮𑌨𑍁-𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃

பொருள் : வேத அத்யயனம், வ்ரதங்கள், ஹோமங்கள், வேத யஜ்ஞங்கள், யாகங்கள், குழந்தைகள், மஹாயஜ்ஞங்கள், யஜ்ஞங்கள் ஆகியவற்றைச் செய்வதால் அவை மனிதனது உடம்பை ப்ரஹ்மமயமாகச் செய்கின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

𑌚𑌿𑌤𑍍𑌰𑌕𑌰𑍍𑌮 𑌯𑌥𑌾𑌨𑍇𑌕𑍈𑌃 𑌰𑌙𑍍𑌗𑍈𑌃 𑌉𑌨𑍍𑌮𑍀𑌲𑍍𑌯𑌤𑍇 𑌶𑌨𑍈𑌃।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌮𑌪𑌿 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍈𑌃 𑌵𑌿𑌧𑌿-𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑍈𑌃॥

-𑌪𑌰𑌾𑌶𑌰-𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃

பொருள்: ஓவியரானவர் எங்ஙனம் பலவிதமான வர்ணப்பூச்சுகளால் சிறிது சிறிதாக வரைந்து நிறைவாக ஒரு உருவத்தை வெளிப்படுத்துகிறாரோ, அதுபோல விதிப்பூர்வமாகச்செய்யப்படுகின்ற ஸம்ஸ்காரங்களும் மனிதனிடத்தில் ப்ராஹ்மண்யத்தை வெளிப்படுத்துகின்றன.

𑌸𑌪𑌾𑌶𑌤𑍍𑌰𑌯-𑌵𑌿𑌶𑍍𑌲𑍇𑌷𑌂 𑌶𑌿𑌵𑌤𑍍𑌵𑌂 𑌵𑍍𑌯𑌜𑍍𑌯𑌤𑍇 𑌯𑌯𑌾।
𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌸𑌾 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯-𑌲𑌕𑍍𑌷𑌣𑌾॥

-𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍 𑌪𑌾𑌰𑍍𑌣-𑌪𑌦𑍍𑌧𑌤𑌿𑌃

பொருள்: எதனால் ஆணவம், ஸஞ்சிதம்-ஆகாமி எனும் கர்மங்கள், மாயை எனும் மும்மல நீக்கமும், ஶிவத்வ அபிவ்யக்தியும் ஏற்படுகிறதோ அந்தக் க்ரியை பக்தி வைராக்ய லக்ஷணமுடைய தீக்ஷா என்று அழைக்கப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அதுபோலவே அந்த்யேஷ்டி என்ற ஸம்ஸ்காரமும் ஜீவனுக்கு ஶிவத்வத்தை வெளிப்படுத்தவல்லதாகவும், தீக்ஷைபெற்ற பின்னர் தெரியாமல் செய்த விஹித கர்ம அனாசரணம், நிஷித்த கர்ம ஆசரணம்; அதாவது விதிக்கப்பட்டதைச் செய்யாமல் இருத்தல், தடைசெய்யப்பட்ட கர்மங்களைச் செய்தல் ஆகிய இருகர்மங்களாலும் உண்டான பாபங்களுக்குப் ப்ராயஶ்சித்தமுமாக, ஓர் அற்புதமான அவச்யமான க்ரியையாகத் திகழ்கிறது.

ஒருவர் புத்திபூர்வமாகச் செய்கின்ற பாபங்களுக்குப் ப்ராயஶ்சித்தத்தை அவரே செய்து கொள்ளலாம். அபுத்திபூர்வமான பாபங்களுக்கு ப்ராயஶ்சித்தமாகக் கூறப்பட்டுள்ள அந்த்யேஷ்டியைச் செய்ய இயலாது. ஆனால் அபுத்தி பூர்வமான பாபங்களும் கண்டிப்பாக தீயபலன்களை அளித்தே தீரும் என்ற காரணத்தால் அபுத்திபூர்வமான பாபங்களுக்கு ப்ராயஶ்சித்தமான அந்த்யேஷ்டி ஸம்ஸ்காரமானது மிகவும் கவனமாகச் செய்யப்படவேண்டும்.

கால அவகாஶக் குறைவு, சோகமான மனநிலை, க்ரியைகளை நன்றாக அறிந்து செய்து வைப்பவர்கள் கிடைக்காத நிலை ஆகிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

காரணங்களால், இக்காலக்கட்டத்தில் அந்த்யேஷ்டி ஸம்ஸ்காரமானது சரியாகச் செய்யமுடிவதில்லை. மேலும், அந்த்யேஷ்டி முதலான அபரக்ரியைகளை அமங்கல க்ரியைகளாக எண்ணும் மனப்பாங்கும் நம்மக்களிடையே காணப்படுகிறது. ஒருவர் அறியாமல் செய்த பாபத்திற்கு ப்ராயஶ்சித்தமாகவும், ஶிவத்வ வ்யக்தியையும் வழங்கவல்லதான ஒரு க்ரியையை எப்படி அமங்கலக் க்ரியை என்று கூறமுடியும்?

எனவே நம் மக்கள் அந்த்யேஷ்டி ஸம்ஸ்காரத்தின் அவச்யத்தை உணர்ந்து, ஶிவாகமங்கள், தர்மஶாஸ்த்ரங்கள், திருக்குறள் போன்ற ஞானநூல்களில் கூறப்பட்டுள்ள நிலையாமையை நன்கு அறிந்து, மனம் தளராமல், இறந்தவருடைய நன்மையை உத்தேசித்து முறையாக அனுஷ்டிக்க முயற்சிசெய்ய வேண்டும்.

எனவே அந்த்யேஷ்டியை நன்றாக அனுஷ்டிக்கும் நிலை ஏற்படவேண்டும் என்ற நல்ல சிந்தனையுடன், தென்சேரிமலை, அருள்மிகு மந்த்ரகிரி வேலாயுத ஸ்வாமி திருக்கோயில் குருத்வம்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஸ்வர்கஶாம்பவஶ்ரீ அ.உ.பாலஸுப்ரஹ்மண்ய குருக்கள், ஆலாலஸுந்தர ஹரதன வாக்ய புத்ரஸந்தான மடாதிபதி, அவர்களது வர்ஷ ஆப்திக தினமான மாசி 27, 11.03.2010 அன்று, அந்த்யேஷ்டி விதியானது வெளியிடப்படுகிறது.

ஶ்ரீ மத் அகோரஶிவாசார்யார் இயற்றிய இந்த அந்த்யேஷ்டி விதியானது திருவாரூர் ஶ்ரீ நிர்மலமணிதேஶிகர் அவர்கள்இயற்றிய ப்ரபா எனும் வ்யாக்யானத்துடன், சிதம்பரம் ஶ்ரீமத் ஆறுமுகநாவல ஸந்தான பீடாதிபதி, ஶ்ரீமத் அம்பலவ நாவல ஜ்ஞானஸம்பந்த பராஶக்தி ஸ்வாமிகள் அவர்களால் 1927ம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

அதுபோலவே, சென்னை சிந்தாதிரிப்பேட்டை. கொ.ஷண்முகஸுந்தர முதலியார், (கலி.5008, கி.பி.1907-1908) ஶ்ரீ அழகப்ப முதலியார் அவர்களால் ஒருமுறையும், பிறகு 1971ம் ஆண்டு, சென்னை, தென்னிந்திய அர்ச்சகர் ஸங்கத்தின் சார்பாக, அச்சங்கத்தின் பொதுக் கார்யதர்சி, ஶிவஶ்ரீ C. ஸ்வாமிநாத ஶிவாசார்யார் அவர்களால் ப்ரபா வ்யாக்யானம் இன்றித் தமிழ்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

அர்த்தத்துடன் ஒரு முறையும் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றுள் சிதம்பரத்தில் வெளியிடப்பட்ட நூலானது பிள்ளையார்பட்டி, **ஶிவ**நெறிச் செம்மல், விகாஸ் ரத்னா டாக்டர். **ஶிவஶ்ரீ** கி. பிச்சை **ஶிவாசார்யார்** அவர்களது பெருமுயற்சியில் அவரது 60ம் ஆண்டு மணிவிழாவில் 06.09.2008 அன்று வெளியிடப்பட்டது.

இந்நூல் அனுஷ்டானத்திற்கு மிகவும் உதவியாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்தில், உரையின்றி மூலம் மட்டும், சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரிப் பேராசிரியர், **ஶிவா**கமச் செல்வர், வ்யாகரண **ஶி**ரோமணி, **ஶிவஶ்ரீ** ஸே. அருணஸுந்தர **ஶிவாசார்யர்** அவர்கள் எழுதிய விளக்கம் மற்றும் விஷயச் சுருக்கங்கள், க்ரியா க்ரம வழிகாட்டி, படங்கள் ஆகியவற்றுடனும், அவரது ஸஹோதரர் **ஶிவஶ்ரீ** ஸே. கபாலிவைத்யநாத குருக்கள் அவர்கள் வரைந்த விளக்கப்படங்களுடனும் தற்போது வெளியிடப்படுகிறது. சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரிப் பேராசிரியர், **ஶிவா**கமச் செல்வர், வ்யாகரண **ஶி**ரோமணி, **ஶிவஶ்ரீ** ஸே. அருணஸுந்தர **ஶிவாசார்யர்** அவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

எழுதியுள்ள விளக்கங்கள், க்ரியா க்ரம வழிகாட்டி, மண்டப அமைப்புவிளக்கம் போன்றவை மிகவும் பயனுள்ளவை ஆகும். தன்னலம் கருதாது அவர் செய்யும் பல பணிகள் போற்றிவணங்கத்தக்கவை. ஶைவ உலகம் குறிப்பாக ஶிவாசார்ய ஸமுதாயம் அவருக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

அந்த்யேஷ்டியின் அவச்யத்தை உணர்ந்து, அதை நன்றாகச் செய்ய வழிசெய்யவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இந்நூலை வெளியிடவேண்டும் என்றுக் கூறி என்னை இப்பணியில் ஈடுபடச்செய்த தென்சேரிமலை **A.ஆலாலஸுந்தர மந்த்ராசல ஶிவம்** அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூல்வெளியீட்டுப் பணியில் பல்வேறு ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டிய, **சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரி**, வ்யாகரணப் பேராசிரியர் **ஶிவஸ்ரீ ஸே. அருணஸுந்தர ஶிவாசார்யர்** அவர்களது சரணாரவிந்தங்களை போற்றிப் பணிந்து வணங்குகின்றேன்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

நன்றி

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது

காலத்தால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலில் பெரிது - திருக்குறள்

என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க இந்நூல் வெளியீட்டுப் பணியில் பல்வேறு உதவிகள் செய்து வெளிவர உதவி புரிந்த, சென்னை, ஶிவஸ்ரீ ஸே. கபாலிவைத்யநாத குருக்கள், காரைக்கால், ஸ்ரீகண்ட ஶிவாசார்ய வித்யாபீட ஶிவாகம அத்யாபகர், கடப்பாக்கம், ஶிவஸ்ரீ திருக்குமரன் ஶிவம் அவர்கள்,சென்னை ஸம்ஸ்க்ருதக் கல்லூரி, கணினி அலுவலர் ஸ்ரீ கணபதி அவர்கள், திருப்பரங்குன்றம் வைஷ்ணவி கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தாருக்கும், குறிப்பாக, ஸௌ. ஶங்கரீ அவர்கள், திருப்பரங்குன்றம் ஸ்ரீ

Center for Shaiva Studies, Pondicherry Collection

-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MOE

ஸ்கந்தகுரு வித்யாலய மாணவச் செல்வங்கள், தென்காசி ஶங்கரா ஆய்வு நிறுவனத்தார் ஆகியோருக்கும், நூலை நல்லமுறையில் அச்சிட்டுத் தந்த தென்காசி ஸுந்தரம் அச்சகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு, அனைவருக்கும் ஸகலநலன்களும் உண்டாக எல்லாம்வல்ல இறைவன் உமையொருபாகன் வண்டார்குழலி உடனுறை அருள்மிகு ஆலங்காட்டீசனின் திருவடிமலர்களைப் போற்றிப் பரவுகின்றோம்.

"ஹரநம: பார்வதீ பதயே ஹரஹர மஹாதேவ"
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பேரன்புடன்

ஶிவசரணகமலைகஶரண்யன்

ஶிவஶ்ரீ. G.கார்த்திகேய ஶிவம்.
ஶ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம்,
திருப்பரங்குன்றம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MoE

அந்த்யேஷ்டியின் அவசியம்

கர்மாவின் பயனாக ஆன்மா பிறவியை எடுக்க நேரிடுகிறது. எனவே கர்மா உள்ளவரை பிறவி உண்டு. அதேஸமயம் எல்லா வினைகளுக்கும் ஒரு எதிர்வினை அவசியம் உண்டு என்ற நியதியின்படி பார்த்தால், முதல் கர்மாவிலிருந்து இரண்டாவது கர்மா - இரண்டாவதிலிருந்து மூன்றாவது கர்மா என்றவாறு இந்த கர்மாக்களின் தொடர்ச்சியானது முடிவற்றதாகவே விளங்குகிறது. எனவே கர்மாக்கள் முடிவற்றதாய் இருப்பதால் கர்மாக்களின் பயனாகிய பிறப்புகளும் முடிவற்றனவே என்றாகிவிடுகிறது. இவ்வாறு இருந்தால் ஆன்மாக்களுக்கு மோக்ஷநிலை என்பது அறவே கிடையாது என்ற நிலை ஏற்படுகிறது.

இந்நிலைமாறி, ஆன்மாக்களுக்கும் மோக்ஷநிலை ஏற்படுவதின் பொருட்டு இறைவனால் விதிக்கப்பட்டதே தீக்ஷை என்ற ஸம்ஸ்காரமாகும். தீக்ஷையில், ப்ரபாவம் வாய்ந்த சிவாசார்யரால் மந்த்ரப்ரபாவத்தினால் கர்மாக்கள் அனுபவிக்கப்பட்டவைகளாகவும், எதிர்வினையற்றவைகளாகவும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

செய்யப்படுவதால், ஆன்மாக்கள் தீக்ஷயினால் மறுபிறப்பற்றவைகளாகவும் மோக்ஷத்திற்குத் தகுந்தவைகளாகவும் செய்யப்படுகின்றன.

ஆனால், மேற்படி தீக்ஷயிலும் கூட அனைத்துக் கர்மாக்களும் அழிக்கப் பட்டுவிட்டன என்பது கிடையாது. அதாவது, கர்மாக்கள் மூன்று விதமானவை: ப்ராரப்தம், ஸஞ்சிதம், ஆகாமி என்று. இப்பிறப்பிற்கு முன்பு பல பிறப்புகளில் நாம் எந்தெந்த கர்மாக்களை செய்து முடித்திருக்கிறோமோ அவை எல்லாவற்றிற்கும் ஸஞ்சிதம் என்று பெயர். அந்த ஸஞ்சித கர்மாக்கள் அனைத்திற்கும் நிஶ்சயமாக ஒவ்வொரு பயன் அவஶ்யம் உண்டு. விதையை விதைத்தல் என்பது ஒரு வினை. அந்த வினையால் அவஶ்யம் ஏற்படக்கூடிய பயன் என்பது விளைந்த பயிராகும். பயிர் விளைந்ததால் அதனை அறுவடை செய்தல் என்ற ஒரு வினை கட்டாயம் ஏற்படுகிறது. இதேபோல் பிற எல்லா விஷயங்களிலும் வினை, வினையிலிருந்து பயன், அப்பயனை அனுபவிக்க மற்றுமொரு வினை என்று இத்தொடர்ச்சி நில்லாது இருந்துகொண்டே இருக்கும். அதேபோல முற்பிறவியில் நாம் செய்த ஒவ்வொரு கர்மாவிலிருந்தும் ஒரு பயன் அவஶ்யம் ஏற்பட்டுள்ளதால், அப்பயனை அனுபவிக்க, மற்றுமொரு வினையை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறாக முற்பிறவியில் நாம் செய்துள்ள

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

பல கர்மாக்களுள் எந்தெந்த கர்மாக்கள், அவ்வவற்றின் பயன்களைத்தர ஆரம்பித்துவிட்டனவோ அந்தந்த கர்மாக்களுக்கு ப்ராரப்தம் என்று பெயர்.

மேற்படி ப்ராரப்தகர்மாக்களின் பயன்களை நாம் அனுபவிப்பதற்காகவே இறைவன் இவ்வுடலை அளித்திருக்கிறார். எனவே ப்ராரப்தகர்மாவின் பயன்களை முழுவதுமாக அனுபவிக்கவேண்டிய காலம் வரை இவ்வுடல் அவஶ்யம் இருக்கும். அதாவது இவ்வுடல் தானாக அழியும்வரை ப்ராரப்தகர்மா அல்லது ப்ராரப்தகர்மாவின் பயன்கள் அவஶ்யம் இருக்கின்றன என்பது அடையாளம். இவ்வுடல் அழிந்துவிட்டால் ; இவ்வுடலைவிட்டு உயிர் தானாக பிரிந்துவிட்டால், உயிரால் அனுபவிக்கப்படவேண்டிய ப்ராரப்தகர்ம பயன்கள் தீர்ந்துவிட்டன என்பது பொருளாகிறது.

இந்த ப்ராரப்தகர்ம பயன்கள் முழுவதுமாக அனுபவிக்கப் பட்டதினாலேயே அனைத்து கர்மாக்களும் தீர்ந்துவிட்டன என்பது கிடையாது. ஏனெனில் பல பிறவிகளில் நாம் செய்த கர்மாக்களுள் ஒரு பகுதியானது பயனைத்தர முற்படும்போது அதற்குமட்டும்தான் ப்ராரப்தம் என்று பெயர். எஞ்சியுள்ள கர்மாக்கள் ஸஞ்சிதம் எனப்படுகின்றன. எனவே ஒரு ப்ராரப்தகர்மபயன் அனுபவிக்கப்பட்ட பின்பு மற்றொரு ஸஞ்சிதகர்மாவானது அதன் பயன்களைத்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MoE

தர முற்படும். அந்நிலையில் அந்த ஸஞ்சிதகர்மாவானது ப்ராரப்தம் என்று சொல்லப்படும். இவ்வாறாக பல ஸஞ்சிதகர்மாக்களின் காரணமாக பல பிறப்புகள் இருந்துகொண்டேதான் இருக்கும்.

சரி ! ஸஞ்சிதகர்மாக்களும் ஒரு குறிப்பிட்ட ஸமயத்தில் தீர்ந்துபோய் அற்றதாகிவிடுமல்லவா? என்றால் அது கிடையாது. அந்தந்த ப்ராரப்த கர்மாக்களின் பயன்களை அனுபவிப்பதன் பொருட்டு நாம் எந்தெந்த கர்மாக்களை செய்யவேண்டியுள்ளதோ அவைகளெல்லாம், செய்வதற்கு முன்பு 'ஆகாமி' என்ற பெயரில் இருக்கும். செய்து முடித்தபிறகு ஸஞ்சிதம் என்ற நிலையை அடைந்து விடும். எனவே இவ்வாறாக மூன்றுவிதமான கர்ம பாஶங்களுக்கு உட்பட்டு ஆன்மாக்கள் பல பிறப்புகளுக்கு உள்ளாகின்றன.

இவற்றுள் ஸஞ்சிதம், ஆகாமி என்ற இருவித கர்மாக்களுள் ஸஞ்சிதமானது தீக்ஷையில் அழிந்ததாகச் செய்யப்படுகின்றது. ஆகாமியானது, த்யானம், பூஜை போன்றவற்றால் அழியும். ப்ராரப்த கர்மாக்களை அதாவது ப்ராரப்த கர்மாவின் பயன்களை அனுபவிப்பதற்காக நாம் செய்யக்கூடிய கர்மாக்கள் இருவிதமானவை. ஒன்று ஶைவ ஸமய ஒழுக்கம் சார்ந்தவை. இதனை ஸமயாசாரபாஶ: என்று குறிப்பிடுவர். மற்றொன்று ஶைவ ஸமய ஒழுக்கம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

சாராதவை. அதாவது, இப்பிறவியில் அனுஷ்டானம் செய்தல், ஶிவபூஜை செய்தல் போன்றவையெல்லாம் ஏதோ ஒரு ப்ராரப்தகர்மாவின் பயனை அனுபவிப்பதற்காக ஏற்பட்டவை. இவை ஸமயாசாரபாஶங்கள் எனப்படுபவை. மற்றபடி மண், பொன், பெண் போன்றவைகளின் பொருட்டு இப்பிறவியில் நாம் மேற்கொள்ளும் கர்மாக்களானது ஏதோ ஒரு ப்ராரப்த கர்மாவின் பயனை அனுபவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதானாலும், அவை ஸமய ஒழுக்கம் சார்ந்தவை அல்ல. எனவே, ஸமயாசாரங்களுக்கு அடிப்படையாக நிற்கக்கூடிய ப்ராரப்தகர்மாக்கள், பிற நடவடிக்கைகளுக்கு அடிப்படையாக நிற்கக்கூடிய ப்ராரப்தகர்மாக்கள் என்று ப்ராரப்தகர்மாக்களை இருவகையாகப் பிரிக்கலாம்.

ப்ராரப்தகர்மாவின் அடிப்படையில் இந்த ஶரீரம் தோன்றியுள்ள காரணத்தால் ப்ராரப்த கர்மாவினை அழித்துவிடுதல் என்பது இச்சரீரத்தினை அழிப்பதற்கு ஸமமாகும். இச்சரீரத்தினை அழிப்பதை எந்த ஶாஸ்த்ரங்களும் ஒத்துக் கொள்ளாததால் ப்ராரப்தகர்மாவை முழுவதுமாக தீக்ஷையில்கூட அழிக்க முடியாது. அதேஸமயம், ஸமய ஆசாரங்களுக்கு அடிப்படையான ப்ராரப்த கர்மாக்களை விட்டுவிட்டு பிற கர்மாக்களை அழிப்பதனால் இப்பிறவியில் இந்த ஶரீரத்தில் அனுபவிக்கப்பட வேண்டிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MO

போகங்கள் வலுவிழந்தவைகளாக ஆகிவிடுகின்றன. ஸமயாசாரத்திற்கு அடிப்படையான ப்ராரப்த கர்மாக்கள் அழிக்கப்படாததால் ஸமயாசாரத்திற்குத் தேவையான போக்ய வஸ்துக்கள் கிடைப்பதில் எந்தத் தடையுமிருக்காது. ஆனால் ஸமயாசாரங்கள் கூட தேவைப்படாதவர்கள் விஷயத்தில் ஸமயாசாரத்திற்கு அடிப்படையான ப்ராரப்தகர்மாக்களும் தீக்ஷையில் அழிக்கப்படுகின்றன.

எனவே, மேற்படி மூன்று கர்மாக்களுள் 'புபுக்ஷு' போன்றோர் விஷயத்தில் ஸமயாசாரத்திற்கு அடிப்படையான ப்ராரப்தகர்மாக்கள் எஞ்சியிருக்கின்றன. 'முமுக்ஷு' போன்றோர் விஷயத்தில் ஸமயாசாரங்களுக்கு அடிப்படையான ப்ராரப்தகர்மாக்களும் அழிக்கப்படுகின்றன. பிற ப்ராரப்தமானது, ஶரீரம் அழிந்தால், அழிந்துவிடும்.

இவ்வாறு இருந்தாலும், தீக்ஷைக்குப் பின், ஒருவர், விதிக்கப்பட்டதை செய்யாமலிருந்தாலோ, நிந்திக்கப்பட்டதைச் செய்தாலோ அதனால் ஏற்படக்கூடிய கர்மாவிற்கு எவ்வாறு அழிவு ஏற்படும் எனில், விதிக்கப்பட்டதை தான் செய்யாததை பிற்பாடு அறிந்த பின்பும், அதேபோல் நிந்திக்கப்பட்டதை

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

தான் செய்ததை பிற்பாடு அறிந்தபின்பும், அவற்றிற்குரிய ப்ராயஶ்சித்தங்களைச் செய்வதால், அவ்விருவகையான கர்மாக்களும் அழிந்துவிடுகின்றன. அவ்வாறு, தவற்றினை அறிந்துகொண்ட பின்பும் ப்ராயஶ்சித்தம் செய்யாவிட்டால் 100 வருடங்கள் அசுரப்பிறப்பு ஏற்படும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

ஆனால், ஒருவன் தான் நிந்திக்கப்பட்டதை செய்திருக்கிறோம் ! என்றோ, விதிக்கப்பட்டதை செய்யாமலிருக்கிறோம் என்றோ, அறவே அறிந்து கொள்ளாத பக்ஷத்தில் ப்ராயஶ்சித்தம் செய்துகொள்ள வாய்ப்பே கிடையாது ! எனினும் அறியாமையால் செய்த கர்மாவிற்கும் உரிய பலன் உண்டு என்ற காரணத்தினால், சொன்னதை செய்யாமலிருத்தல், சொல்லப்படாததை செய்தல் ஆகிய இருவித கர்மாக்களால் நிஶ்சயமாக தீய பலன் ஏற்பட வாய்ப்புண்டு, ப்ராயஶ்சித்தம் செய்யப்படாததால். இவ்விரு கர்மாக்களையும் அழிப்பதற்கான ஒரே ஸாதனமாக இருப்பது 'அந்த்யேஷ்டி' என்பது. எனவே, செய்யப்பட்டும்கூட, அறியப்படாததால், ப்ராயஶ்சித்தம் செய்யப்படாத கர்மாக்களை ஶுத்தம் செய்வதற்கு = அழிப்பதற்கு அந்த்யேஷ்டி ஒன்றே வழியாகும். எனவே, ஶைவஸமயத்தில் அந்த்யேஷ்டி என்பது ஒரு சிறந்த ஸம்ஸ்காரமாகக் கருதப்படுகின்றது. எனவே, அந்த்யேஷ்டியை அவஶ்யம் செய்ய வேண்டும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MoE

அந்த்யேஷ்டி தொடர்பான சில கேள்வி - பதில்கள்

வைதிக முறைப்படி செய்யக்கூடிய அபரஸம்ஸ்காரங்களையும், அந்த்யேஷ்டி ஸம்ஸ்காரங்களையும் சேர்த்துச் செய்யலாமா?

செய்யலாம். ஸ்ரீமத் பூர்வகாமிகாகமத்தில், அக்னிகார்யவிதி படலத்தில், எந்தெந்த வைதிக-ஸம்ஸ்காரங்களையும் சைவஸம்ஸ்காரங்களையும் சேர்த்துச் செய்யலாம் என்று குறிப்பிடும் பொழுது, புண்யாஹவாசனம் அந்த்யேஷ்டி போன்றவையெல்லாம் சொல்லப்பட்டு இருக்கின்றன. எனவே சிவாசார்யர், சிவப்ராம்ஹணர், சிவவேதியர், என்றெல்லாம் ஆகமங்களில் குறிப்பிடப்பட்ட சிவாசார்யப் பெருமக்கள் ப்ராஹ்மணர்களுக்கு அவரவர்களது ஸூத்ரத்தில் அதாவது குறிப்பாக போதாயன ஸூத்ரத்தில் குறிப்பிடப்பட்ட அபர-ஸம்ஸ்காரங்களையும், அந்த்யேஷ்டி ஸம்ஸ்காரங்களையும் சேர்த்தே செய்யலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

𑌵𑌿𑌹𑌿𑌤𑍈𑌃 𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌃 𑌕𑍁𑌣𑍍𑌡𑍈𑌃 𑌉𑌹𑌯𑍋𑌸𑍍𑌸𑌜𑍍𑌞𑌾𑌯𑌕𑍈𑌃 ॥

𑌕𑍁𑌣𑍍𑌡𑍇 𑌵𑌾 𑌸𑍍𑌥𑌣𑍍𑌡𑌿𑌲𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌤𑍍𑌰𑌯𑍋𑌽𑌗𑍍𑌨𑍀-𑌵𑍈𑌦𑌿𑌕-𑌶𑍈𑌵𑌕𑌾𑌃 ।

𑌵𑍈𑌦𑌿𑌕𑌾𑌨𑍍𑌨𑍍𑌯𑌵𑌸𑌾𑌨𑍇 𑌤𑍁 𑌶𑍈𑌵𑌂 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌵𑌾𑌨𑌯𑍇𑌤𑍍 ॥

𑌕𑌰𑍍𑌤𑌾 𑌶𑌿𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌤𑍋𑌽𑌗𑍍𑌨𑍌 𑌤𑍇𑌨 𑌸𑌂𑌯𑍋𑌜𑌨𑌂 𑌨𑌯𑍇𑌤𑍍 ।

𑌨𑌵𑌭𑌿𑌃 𑌕𑍁𑌣𑍍𑌡𑍈𑌃 𑌸𑌾𑌧𑍍𑌯𑌂 𑌸𑌹𑌸𑍍𑌰𑌂 𑌕𑍃𑌤𑌿 ॥

- பக். 55, அக்னிகார்யவிதி படலம், (தேவநாகரீ) ஸ்ரீமத் பூர்வ காமிகாகமம்,

---

சைவாகம முறைப்படியான அந்த்யேஷ்டி ஸம்ஸ்காரங்களை வீட்டிலேயே செய்து விடலாமா? அல்லது ஶ்மஶானத்தில் தான் செய்யவேண்டுமா?

தற்போது நாம் வெளியிடும் இந்த அகோர சிவாசார்ய-பத்ததியில், சூர்ணோத்ஸவமானது வீட்டில் செய்யப்படவேண்டும் என்றும், பிற ஸம்ஸ்காரங்களெல்லாம் ஶ்மஶானத்தில் செய்யப்பட வேண்டும் என்றும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

C-0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta and IKS-MC

தெளிவான குறிப்பு இருப்பதால், சூர்ணோத்ஸவத்தை வீட்டிலேயும், பிற ஸம்ஸ்காரங்களை *ஸ்மஶா*னத்திலும் செய்வதுதான் சரி எனத் தெரிகிறது. வேறு நூல்களில் அதுபோன்ற குறிப்பு இருக்குமேயானால் அதை அனுஷ்டிப்பது அவரவர் ஸம்ப்ரதாயம் சார்ந்த விஷயமாகும்.

அந்த்யேஷ்டியின் சிவாக்னியையும் வைதிகப்படியான அக்னியையும் சிதையில் எவ்வாறு சேர்ப்பது?

முன்பே சொன்னது போல இரண்டு ஸம்ஸ்காரங்களையும் ஒரு சேரச் செய்வதற்கான அனுமதி ஆகமத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும் இந்தப் பத்ததியில் வைதிக அக்னியை எவ்வாறு இதோடு சேர்ப்பது என்ற குறிப்பு காணப்படவில்லை. அதே சமயத்தில், வைதிக அபர ஸம்ஸ்காரப்படி அக்னியானது இறந்தவரின் மார்பில் சேர்க்கப்படவேண்டும். சைவாகம முறைப்படியான அக்னியை சிதையோடு சேர்க்கக்கூடிய முறையானது இரண்டு விதமாகக் காணப்படுகிறது.

